# தெங்கு கிளானாவில் சரவண பவன் 4ஆவது கிளையை கராத்தே தியாகராஜன் திறந்து வைத்தோர்



கராத்தே தியாகராஜனுக்கு சரவணபவன் உணவகத்தின் உரிமையாளர் சிவகுமார் மாலை அணிவித்து சிறப்பு செய்தார்.

கிள்ளான், ஜூன் 7-

பல்வேறு நாடுகளில் உணவகத் துறையில் புகழ்பெற்று விளங்கி வரும் சரவணபவன் மலேசியாவின் 4ஆவது கிளை உணவகத்தை முன்னாள் சென்னை மேயர் கராத்தே தியாகராஜன் நேற்று அதிகாரப்பூர்வமாக திறந்து வைத்தார்.

கிள்ளான், ஜாலான் தெங்கு கிளானா-வில் (அஜுந்தாவுக்கு எதிர்புறம்) ஓர் உயர்தர சைவ உணவுக்குப் புகழ் பெற்ற சரவணபவன் 4ஆவது கிளை உணவகம் அதிகாரப்பூர்வமாக திறப்புவிழா கண்டது.

தமிழ் நாட்டில் திறக்கப்பட்டு துபாய், அமெரிக்கா, சிங்கப்பூர், கனடா ஆகிய நாடுகளிலும் அது வாணிபச் சிறகை விரித்திருக்கிறது.

சைவ உணவுகளை விரும்பி சாப்பிடுபவர்களுக்காக ஒரு தரமான உணவகத்தை கிள்ளானில் திறக்க வேண்டுமென்று பலர் கேட்டுக் கொண்டதால் மக்களின் ஆவலைப் பூர்த்தி செய்யவே கிள்ளானில் சரவணபவன் உணவகம் திறக்கப்பட்டதாக அதன் உரிமையாளர் பி. ஆர். சிவகுமார் தெரிவித்தார்.

நகராண்மைக்கழக உறுப்பினர் கீவன் ராகவன் மதுரா பயண நிறுவன உரிமையாளர் பாஸ்கரன், தனலெட்சுமி கிள்ளான் சரவணபவன் மேலாளர் பாண்டியன்உட்பட பலர் திறப்பு விழாவில் கலந்து சிறப்பித்தனர்.